# IN THE COURT OF III ADHOC JUDGE

## City Civil Court Chennai -104

**PW1:Venkatesan OS. NO:2210/2023 DATE:25.03.2026**

**குறுக்கு விசாரணை**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் இந்த வழக்கை அப்பா பெயரிலிருந்து அம்மா பெயருக்கு சொத்தை மாற்றுவதற்கு தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளது. எனக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை என்னுடைய வழக்கறிஞர் விளக்கினார். பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு பாகப்பிரிவினை வேண்டுமென்று கூறப்பட்டள்ளது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு மூன்று பிள்ளைகள் வாரிசுகள். இரண்டு பிள்ளைகள் இறந்து போய்விட்டனர். இந்த வழக்கை நான் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கை வசந்தா மற்றும் நானும் ஆகியோர்கள் தாக்கல் செய்துள்ளோம். பிராதில் முதலில் வசந்தா கையொப்பமிட்டுள்ளார் பிறகு நான் கையொப்பமிட்டுள்ளேன். எனக்கு தமிழ் படிக்கத் தெரியாது. எனக்கு பிராதில் முதலில் உள்ள கையொப்பம் வசந்தா என்று தமிழில் இருப்பது எனக்கு தெரிந்தது. பிராதில் இரண்டாவது இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். இதில் M. வெங்கடேசன் என்று கையொப்பமிட்டுள்ளேன். எனக்கு தமிழும் ஆங்கிலமும் படிக்க தெரியுமென்றும் நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வசந்தா என்பவர் என்னுடைய அக்கா. நான்

வசந்தாவிடம் வழக்கு தாக்கல் செய்வதற்கு கையொப்பம் பெறுகிறேன் என்று கூறாமல் வாரிசுச் சான்றிதழ் வாங்குவதற்கு கையொப்பம் பெறுகிறேன் என்று ஏமாற்றி கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய அக்கா வசந்தாவிற்கு மூன்று பிள்ளைகள். அதில் ஒருவர் இறந்து போனார். வசந்தாவின் பெண் பிள்ளைகள் இருவர் இந்த வழக்கில் தங்களை வசந்தா இறந்த பிறகு வாரிசாக சேர்க்க வேண்டாமென்று கூறிவிட்டனர். இந்த வழக்கில் வசந்தாவின் வாரிசுகளை சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்த போது மூன்றில் ஒரு பாகம் எனக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுள்ளேன். நான் வழக்கு தாக்கல் செய்யும் போது நான்கில் இரண்டு பாகம் எனக்கும் வசந்தாவிற்கும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மூன்றில் ஒரு பாகம் தான் கேட்டுள்ளேன். என்னுடன் பிறந்தவர்கள் வசந்தா, வெங்கடேசன், குணசேகரன், சீனிவாசன் என்பவர்கள். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு என்னுடைய அம்மா உயிருடன் தான் இருந்தார். என்னிடம் காட்டப்படும் வாரிசுச் சான்றிதழ் Ex.A7–ல் என்னுடைய பெயர் நான்காவதாக உள்ளது. நான் மூன்று சொத்தில் பாகம் வேண்டுமென்று கேட்டுள்ளேன். காசி தியேட்டர் அருகில் இருக்கும் பகுதியில் ஜாபர்கான் பேட்டையில் கதவு எண். 69–ற்கு பாகப்பிரிவினை கேட்டுள்ளேன். ஈகா தியேட்டருக்கு அருகில் இருக்கும் இடத்தில் பூமகள் தெருவில் கதவு எண்.20–ல் உள்ள வீட்டிற்கு பாகம் கேட்டுள்ளேன் மற்றும் சிங்கபெருமாள் கோவில் உள்ள காலி மனையில் பாகம் கேட்டுள்ளேன். நான் பிராதில் மூன்று சொத்துக்கள் காட்டாமல் இரண்டு சொத்துக்கள் தான் காட்டியுள்ளேன் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் பாகப்பிரிவினை கேட்டிருக்கும் பட்சத்தில் எந்த சொத்திற்கு பாகம் கேட்டுள்ளேன் என்ற விவரம் தெரியாமல் நான் பாகப்பிரிவினை

கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா இறந்த தேதி, வருடம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் Ex.A3–ன் படி என்னுடைய தகப்பனார் 30.01.2001–ல் இறந்து போய் உள்ளார். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு என்னுடைய அம்மா வசந்தா மற்றும் நான் என்னுடைய சகோதரர் முதல் Item சொத்தை கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். குணசேகரனுக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த பத்திரம் Ex.B1. அதேபோல 2–ம் item சொத்தை பொருத்து என்னுடைய அம்மா, நான் மற்றும் ஒரு சகோதரர் என்னுடைய சகோதரர் குணசேகரனுக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த பத்திரம் Ex.B2. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் போது முதல் item சொத்தின் ஒரு பகுதியை 12.10.1990–ல் முத்து என்பவருக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் இந்த சொத்திற்கும் பாகப்பிரிவினை கேட்டுள்ளேன் என்றும் எனக்கு சொத்து விவரங்கள் எதுவும் தெரியாமல் முத்துவிற்கு கிரையம் செய்த சொத்தையும் சேர்த்து பாகப்பிரிவினை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இச்சாட்சியின் சாட்சியம் இத்துடன் நிறுத்தி ஒத்திவைக்கப்படுகிறது.)